(2021-22-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்) (பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE 21 PTM 416**

**REG.NO**

**என்.ஜி.எம்.கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2023**

**எம்.ஏ. – தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 70**

**நான்காவது பருவம்** **காலம் : 3 மணி நேரம்**

## சங்க இலக்கிய ஒப்பீடு

**பகுதி – அ** **(10 x 1 = 10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (மு1)

1. கொண்டுகூட்டிப் பொருளுணர் திறனை உணர்த்துவது?
   அ) நோக்கு ஆ) மாட்டு
   இ) வண்ணம் ஈ) கைகோள்
2. சங்க இலக்கியம் வீரயுகப் பாடல்கள் என வலியுறுத்தியவர் யார்?
   அ) என்.சண்முகலிங்கன் ஆ) தி.சு. நடராஜன்
   இ) க.கைலாசபதி ஈ) எஸ்.ரா.பவுண்ட்
3. அம்பை தீட்சிதர் கூறும் அணிகளின் எண்ணிக்கை ____________.
   அ) 4 ஆ) 10 இ) 124 ஈ) 125
4. கீழ்க்காணுபவற்றுள் எது புற அமைப்பை அடிப்படையாகக் கொண்டு வகைமை செய்யப்பட்டதல்ல?
   அ) ஒருபா ஒருபஃது ஆ) இருபா இருபஃது
   இ) முல்லைப்பாட்டு ஈ) இரட்டை மணிமாலை
5. தமிழ் வீரயுகப் பாடல்கள் பெரும்பாலும் எந்த யாப்பு வடிவில் அமைந்தவை?
   அ) வெண்பா ஆ) பரிப்பாடல்
   இ) ஆசிரியப்பா ஈ) வஞ்சிப்பா

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை தருக** **(K2)**

6. இளிவரல் மெய்ப்பாட்டின் அடிப்படைகள் யாவை?
7. “பண்ணத்தி” என்றால் என்ன?
8. அனுபாவம் - குறிப்புரைக்க. ..
9. துயிலெடை நிலை என்றால் என்ன?
10. தொடக்கத்தில் தன்னுணர்ச்சிப் பாடல்கள் எவ்வாறு அமைந்தன?

**பிரிவு – ஆ** **( 5 x 4 = 20 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** **(K3)**

11. a) நாடக வழக்கு – உலகியல் வழக்கு குறிப்பு வரைக.

**(OR)**

b) இலக்கியத்தில் “மரபு கோட்பாடுக்” குறித்து எடுத்துரைக்க.

**(CONTD …. 2)**

ETHICAL PAPER

12. a) சங்க இலக்கியத்தில் இடம்பெறும் முருகன் குறித்த தொன்மங்கள் யாவை?

(OR)

b) "வடிவத்திற்கேற்ற கருத்தும், கருத்துக்கேற்ற வடிவமும்" என்ற தமிழர்தம் இலக்கியக் கொள்கையைப் பாடல்களின் அடிவரையறை, முடிவுநிலைகளைக் கொண்டு புலப்படுத்துக.

13. a) விபாவத்தின் வகைகளை விவரி.

(OR)

b) புறப்பாட்டில் தொனி அமையும் நிலையை எடுத்தியம்புக.

14. a) கூர்தலறக் கோட்பாடும் இலக்கிய வகையும் பற்றி விளக்குக.

(OR)

b) பாட்டியல் நூல்களின் கட்டமைப்பு மற்றும் உட்பொருள் குறித்து தெளிவுபடுத்துக.

15. a) வீரநிலைப் பாட்டுகளின் பண்புகளைக் குறிப்பிடுக. .

(OR)

b) கபிலரின் மஞ்ஞைப்பத்து மற்றும் வோட்ஸ்வொர்த்தின் குயிற்பாட்டு ஆகியவற்றை ஒப்பிடுக.

**பிரிவு - இ (4x10=40 மதிப்பெண்கள்)**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக (பதினாறாவது வினாவுக்குக் கட்டாயம் விடையளிக்க வேண்டும்).**

**(K4) or(K5)**

16. தமிழின் இலக்கிய இலக்கண மரபில் அங்கதப் பாடல்கள் குறித்து விவரிக்க.

17. சங்க இலக்கிய அணிக்கோட்பாட்டினைச் சான்றுடன் விளக்கியுரைத்து அதனை மீட்டுருவாக்கம் செய்வதன் தேவையை விவாதிக்க.

18. சங்க இலக்கியம் உளவியல் இலக்கியம் எனும் கூற்றினை ஆராய்க.

19. தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியலையும் பரதமுனிவரின் இரசக்கோட்பாட்டினையும் ஒப்பிட்டாய்க.

20. தமிழில் இலக்கியவகைகளின் வளர்ச்சி நிலைகளை விவரிக்க.

21. "தமிழின் முல்லைத்திணைப் பாடல்கள் மிகச்சிறந்த புனைவுநலம் மிக்கவை" எனும் தமிழண்ணலின் கூற்றினை நிறுவுக.

************************